கோவை, விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை: திரு.மு.சுப்பையா,பி.எஸ்.சி (விவ),

செ.மு.ஆ.எண். அ1 / 23189 /2021 நாள்: 13.12.2021.

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – 01.10.2019 அன்றைய நிலையிலான இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு பதவி உயர்வு அங்கீகரிக்கப்பட்டது – முறையான பதவி உயர்வில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக திருச்சி, விதைஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்தில் பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது – இளநிலை உதவியாளர் (பி.அ) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கி உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை:
1. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அஉ.ப.1/ 117368 /2019, நாள்.24.07.2020.
2. இவ்வியக்கக செயல்முறை ஆணை எண்.அ1/14636/2020, நாள். 09.09.2020.
3. திருச்சி, விதைஆய்வு துணை இயக்குநர் கடித எண். அ.1311/2021, நாள்– 24.11.2021.

••••••••••

**உத்தரவு:**

பார்வை (1) மற்றும் (2)–ல் காணும் செயல்முறை ஆணைகளைத் தொடர்ந்து, 01.10.2019 அன்றைய நிலையிலான இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு பதவி உயர்வு அங்கீகரிக்கப்பட்ட முறையான பதவி உயர்வில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக திரு.த.மனோஜ்குமார் அவர்களுக்கு திருச்சி, விதைஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்தில் பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து திரு.த.மனோஜ்குமார் அவர்கள் இத்துறைக் கட்டுப்பாட்டிலுள்ள திருச்சி, விதைஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது)–ஆக 14.09.2020 முற்பகல் பணியில் சேர்ந்து கொண்டார்.

அன்னார் இளநிலை உதவியாளர்(பி.அ) பதவியில் பணியேற்ற நாளான 14.09.2020 முற்பகல் அன்று பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்காணும் பணியாளர் இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவியில் இரண்டு ஆண்டு கால தகுதிகாண் பருவத்தினை, மூன்று ஆண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடிக்க வேண்டும்.

இரண்டு ஆண்டு பணிக்காலத்திற்குள், இளநிலை உதவியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்து, இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண்பருவம் முடித்ததாக அறிவித்து ஆணையிட்ட பின்னரே, இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டாவது மற்றும் தொடர் காலமுறை ஊதிய உயர்வுகள் பெறத் தகுதியுடையவராவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/– மு.சுப்பையா,
விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று
இயக்குநர், கோவை–13.

பெறுநர்

திரு.த.மனோஜ்குமார்,
இளநிலை உதவியாளர்(பி.அ),
விதைஆய்வு துணை இயக்குநர் அலுவலகம், திருச்சி.
**வழி**– விதைஆய்வு துணை இயக்குநர் அலுவலகம், திருச்சி **(*)**

**(*)** தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொண்டு பதிவு செய்த விவரம் பக்க எண்ணுடன் இவ்வியக்ககத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல்:வேளாண்மை இயக்குநர், சென்னை (,அஉப–1 பிரிவிற்கு)
நகல்: இருப்புக்கோப்பு.

+ /உத்தரவின்படி/

ஆட்சி அலுவலர் 15/12/21

15/12/21